# பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகம்: தொல்லியல் தரவுகளை முன்வைத்து ...

**சி. இளங்கோ**

*பெருங்கற்காலம் என்பது பெரிய கற்களைப் பயன்படுத்திக் கல்லறைகளை அமைத்து வாழ்ந்த மக்களைப்பற்றிப் பேசுவதாகும். கி. மு. 1000 முதல் கி. மு. 300 வரையிலான காலகட்டமே பெருங்கற்கால காலமாகக் காலக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளது*

*சங்ககாலத்திற்கு முந்தைய பெருங்கற்காலத் தமிழ்ச் சமூக வரலாற்றைக் கல்லறைகளில் இருந்தே மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியுள்ளது. பெருங்கற்காலத்தின் தொடர்ச்சியாகவே சங்க காலம் அமைகின்றது. சங்க காலச் சமூக வரலாற்றைக் கட்டமைப்பதற்கு இலக்கியப் பிரதிகள், தொல்லியல் தரவுகள், கல்வெட்டுகள் முதலியன பயன்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் பெருங்கற்காலத்தின் தொடக்க கால மக்களின் வாழ்வியலைக் கட்டமைப்பவை தொல்லியல் தரவுகள் அடிப்படையிலான கருதுகோள்களே. புதிய புதிய தொல்லியல் ஆய்வுகளும் தரவுகளும் பெருங்கற்காலம் குறித்துச் சொல்லப்பட்ட முடிவுகளை, பழையவையாக மாற்றுகின்றன.*

பெருங்கற்காலம் என்பது பெரிய கற்களைப் பயன்படுத்திக் கல்லறைகளை அமைத்து வாழ்ந்த மக்களைப்பற்றிப் பேசுவதாகும். கி. மு. 1000 முதல் கி. மு. 300 வரையிலான காலகட்டமே பெருங்கற்கால காலமாகக் காலக்கணிப்புச் செய்யப்பட்டுள்ளது. பெருங்கற்காலச் சின்னங்கள் தமிழகத்தில் பரவலாகக் காணக் கிடைக்கின்றன. சி. க. சிற்றம்பலம் பெருங்கற்காலக் கல்லறைகளை இரண்டு பிரிவுகளாகப் பகுக்கின்றார். (பண்டைய தமிழகம், 1999: 104-105).

முதல் பிரிவு: 1. கல்திட்டைகள், 2. கல்மேசைகள், 3. துளையுடைய கல்லறைகள், 4. பல பிரிவுக் கல்லறைகள் (இரண்டு அல்லது மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டவை), 5. சுவஸ்திக வடிவக் கல்லறைகள்.

(இவை மட்டுமல்லாமல் கேரள, கர்நாடக மாநிலங்களில் தொப்பிக் கல், குடைக்கல், குடைவரைக் குகை ஆகியவையும் காணப்படுகின்றன.)

இரண்டாம் பிரிவு: 1. தாழிகள், 2. குழி அடக்க முறைகள், 3. கல்வட்டங்கள், 4. குத்துக் கற்கள், 5. நடுகற்கள்.

## பெருங்கற்காலக் கல்லறைகள்

தமிழகத்தில் சுமார் 130 இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப் பட்டதில், 55 அகழாய்வுகள் பெருங்கற் காலத்துடன் தொடர்புடை யவையாக உள்ளன என்று தி. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். (நாகரீக வார்க்கையின் தொக்க காலம் - பெருங்கற்காலம் சமூக விஞ்ஞானம், பக். 109, ஏப்ரல்-மே-ஜூன், 2010) தமிழகத்தின் பல்வேறு

பகுதிகளில் காணப்படும் பெருங்கற்காலச் சின்னங்கள் குறித்த விவரம் வருமாறு:

திருநெல்வேலி - ஆதிச்சநல்லூர், கொற்கை.

மதுரை - பெருமாள் மலை, டி. கல்லுப்பட்டி, தடாம்பட்டி, துவரைமான், அனுப்பானடி, கோவலன் பொட்டல்.

புதுக்கோட்டை - திருக்கட்டளை, தொடையூர், சித்தன்ன வாசல்.

தஞ்சாவூர் - கம்பர் மேடு

திருச்சிராப்பள்ளி - அழகரை, திருக்காம்புலியூர், கரூர்.

பாண்டிச்சேரி - முத்தராபாளையம், சோத்துக்கேணி, சாத்தமங்கலம், அரிக்கமேடு.

தென்ஆர்க்காடு - கொல்லூர்.

வடஆர்க்காடு - மோட்டூர், மலையாம்பட்டு, கல்லேரி மலை, ஒடுகத்தூர், பையம்பள்ளி, செங்கமேடு.

செங்கற்பட்டு - சானூர், குன்னத்தூர், அமிர்தமங்கலம், பாலூர்.

சென்னை பல்லாவரம், கீழ்ப்பாக்கம் டைலர்ஸ் சாலை.

தர்மபுரி - மல்லபாடி.

கோயம்புத்தூர் - நல்லம்பட்டி, கனராபாளையம், செட்டிப்பாளையம், சிறுமுகை.

ஈரோடு - நிச்சாம்பாளையம், கொடுமணல்.

முதலான இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகள் மட்டுமல்லாமல், இன்னும் புதிய இடங்களும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டு அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் ஆரம்பகால பெருங்கற்கால மக்கள் வாழ்வியல் குறித்து அறியமுடியாத செய்திகளாக அக்கால எழுத்து முறைகள், அரசியல், வாழ்வியல், வர்த்தகம், கட்டிடக் கலை மரபு, மொழி, இலக்கியம், குடிகள், போர், சண்டைகள் முதலானவை உள்ளன

## பெருங்கற்காலத் தரவுகளும் ஆய்வுகளும்

பெருங்கற்கால அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற பொருட்களைக் கொண்டு அம்மக்களின் வாழ்வியலைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இக்காலகட்ட மக்களைப் பின்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்:

1. மட்பொருட்களைச் செய்யும் குயவர்கள்
2. உலோகப் பொருட்களைச் செய்யும் கொல்லர்கள்
3. மரத் தச்சர்கள்
4. கற்சிற்பிகள்
5. உழவர்கள்
6. மணிகள் முதலானவை செய்யும் கைவினைஞர்கள்
7. நெசவாளர்கள்

என்று பல்வேறு தொழில்களைச் செய்யும் மக்கள் வாழ்ந்துள்ளனர். அகழாய்வில் கிடைத்த பொருட்களைக் கொண்டு இதனை உறுதியாகக் கூறமுடிகின்றது. இந்நிலையில் ஆரம்பகால பெருங்கற்கால மக்கள் வாழ்வியல் குறித்து அறியமுடியாத செய்திகளாக அக்கால எழுத்து முறைகள், அரசியல், வாழ்வியல், வர்த்தகம், கட்டிடக் கலை மரபு, மொழி, இலக்கியம், குடிகள், போர், சண்டைகள் முதலானவை உள்ளன.

இச்சூழலில் பெருங்கற்கால மக்களின் வரலாற்றை எழுதக் கீழ்க்காணும் தொல்லியல் தரவுகளே முதன்மையாக உள்ளன. அவை:

மட்பொருட்கள்: தட்டுகள், சிறிய பானைகள், கிண்ணங்கள், தாங்கிகள், குவளை, கொள்கலன், மூடிகள், சாடிகள், நான்கு கால் சாடிகள், ஈமப் பேழைகள். (மட்பாண்டப் பொருட்களுக்குக் கருப்பு-சிவப்பு, கருப்பு, செங்காவி, வெள்ளை வண்ணங்கள் பூசப்பட்டுள்ளன.)

இரும்புப் பொருட்கள்: கத்திகள், கோடரிகள், ஈட்டிகள், நீண்ட ஈட்டிகள், ஈட்டி முனைகள், நீண்ட சூலங்கள், கொழுக்கள், மண்வெட்டிகள், அரிவாள்கள், ஆணிகள், உளிகள்.

பிற உலோகப் பொருட்கள்: செம்பு, வெண்கலம், தங்கம். (மோதிரம், தலைப்பட்டம் ஆகியவை ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ளன.)

எந்த இனக்குழு மக்கள் இவ்வகையான பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்தி வந்தனர், அவர்கள் யாருடன் தொடர்பு கொண்டிருந் தனர் முதலிய பல கேள்விகள் ஆய்வுக்குரியனவாகவே உள்ளன

மணிகள்: அகேற், கார்னீலியன், கிறிஸ்ரஸ், ஜஸ்பர், பெரில், அமெதிஸ்பர், சல்செடனி போன்ற கல்லினால் செய்யப்பட்ட மணிகள் மற்றும் கண்ணாடியில் செய்யப்பட்ட மணிகள்.

சங்கு வளையல்கள் மற்றும் தந்தத்தால் செய்யப்பட்ட பொருட்கள்.

பருத்தி ஆடைகள் (ஆதிச்சநல்லூரில் கிடைத்த பருத்திப் படிவங்கள்.)

மட்பாண்டங்களில் போடப்பட்டுள்ள குறியீடுகள்.

ஒழுங்குபடுத்தப்பட்ட கற்பலகைகள்.

சுடுமண் பொம்மைகள், சுடுமண்ணாலான காதணிகள் மற்றும் சுடுமண் மணிகள்.

உறை கிணறுகள், சுடுமண் வடிகுழாய்கள் மற்றும் சுட்ட செங்கற்கள்.

நெல், கம்பு, வரகு, சோளம் முதலிய நன்செய், புன்செய் தானியங்கள்.

கிடைக்கின்ற இப்பொருட்களைக் கொண்டு பெருங்கற்கால மக்கள் எவ்வாறு வாழ்ந்திருப்பர் என்று மட்டுமே யூகிக்க முடிகின்றது. எந்த இனக்குழு மக்கள் இவ்வகையான பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்தி வந்தனர், அவர்கள் யாருடன் தொடர்பு கொண்டிருந் தனர் முதலிய பல கேள்விகள் ஆய்வுக்குரியனவாகவே உள்ளன.

### பெருங்கற்கால நீட்சியாகச் சங்ககாலம்

சங்க இலக்கியப் பாடல்கள் சிலவற்றில் பெருங்கற்காலம் குறித்த பதிவுகள் உள்ளன. இவையும் முழுமையாக இல்லை. அகநானூற்றில் பெருங்கற்காலத்தில் அமைக்கப்பட்ட பதுக்கை மரபின் தொடர்ச்சியைப் பார்க்க முடிகின்றது. 'பரல் உயர் பதுக்கை' (அகம். 91) என்ற தொடர் மூலம் பதுக்கைகள் மேடாக அமைக்கப் பட்டிருப்பதை அறியமுடிகின்றது. இத்தகைய கற்பதுக்கைகள் பற்றி நற். 352; குறு. 77, 297, 372; கலி. 12; புற. 3, 264; அகம். 109, 231, 157, 215,







151 முதலிய பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. மேற்கண்ட பாடல்களினூடாகக் காணப்படும் கற்பதுக்கைகள் குறித்த பதிவுகளைப் பின்வரும்படி புரிந்து கொள்ளலாம்.

கற்பதுக்கைகள் உயர்வான மேடாக அமைக்கப்படுகின்றன.

கள்வர்களால் கொல்லப்பட்டவர்களைப் புதைப்பதற்கு அமைக்கப் பட்ட பதுக்கைகள் சரியான முறையில் அமைக்கப்படுவதில்லை.

பதுக்கைக் குழியில் புதைக்கும் பொழுது மக்கும் பொருளான தழையைப் போட்டுப் புதைக்கும் வழக்கம் இருந்தது.

பேழைகளில் வைத்துப் புதைக்காமல் நேரடியாக மண்ணில் புதைக்கும் முறையும் இருந்தது.

சங்ககாலப் பதுக்கை மரபு பற்றி அறிந்துகொள்ளும் நிலையில், பிற சங்கப் பாடல்களைக் கொண்டும் பெருங்கற்காலச் சமூகம் குறித்த அனுமானங்களை ஆய்வாளர்கள் வெளியிடுகின்றனர்.

*சங்ககால மருத நிலச் சமூகத்தில் விவசாயம் சிறப்புற்று இருந்ததைப் போன்று, அதற்கு முந்தைய பெருங்கற்காலத்திலும் விவசாயம் சிறப்பாக நடைபெற்றிருக்க வேண்டும். இதற்குச் சான்றாகப் பெருங்கற்காலப் புதை குழிகளில் வைக்கப்பட்ட நெல் பானைகள் கிடைத்துள்ளன. இதுபோன்றே பெருங்கற்கால மக்களும் இரும்பைப் பயன்படுத்தி வேளாண்மைச் செய்யும் முறைகளை அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றாக அகழாய்வில் கிடைத்த 'கொழுக்கள்' விளங்குகின்றன.*

*நிலையாக ஓர் இடத்தில் தங்கி வேளாண்மை செய்த பெருங்கற்கால மக்கள், தங்களுக்கான குழுத்தலைமையைக் கொண்டிருக்க வேண்டும். உபரி உற்பத்தியைத் தலைமைப் பாதுகாத்திருக்க வேண்டும். இச்சூழலில் ஒரு குழுவிடமிருந்து உபரியைக் கைப்பற்றுதல் முதலான செயல்பாடுகள் தொடர, அதன் காரணமாகக் குழுச் சண்டைகள், போர்கள் நிகழ்வதற்கு வாய்ப்புகள் தோன்றியிருக்கும். பெருங்கற் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சிறு குழுக்களே பிற்காலத்தில் தென்னகத்தை ஆட்சி செய்யும் நிலைக்கு உயர்ந்தன என்பதை, சி. க. சிற்றம்பலம்,*

பெருங்கற் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சிறு குழுக்களே பிற்காலத்தில் தென்னகத்தை ஆட்சி செய்யும் நிலைக்கு உயர்ந்தன

> *விவசாயச் செழிப்புடன் காணப்பட்ட பெருங்கற்காலச் சமுதாயம் பல்வேறு குழுக்களைக் கொண்டிருந்தது. இவ்வாறு காணப்பட்ட குழு ஆட்சிதான் பின்னர் வந்த மூவேந்தர் ஆட்சிக்கு வழிவகுத்தது. இக்குழுக்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. இவர்களில் பரதவர், கோசர், ஆவியர், ஓவியர், வேளிர், ஆயர், ஆண்டார், கள்வர், மறவர், புலையர், கடம்பர், மலையர், குடவர், புலியர், வில்லோர், கொங்கர், குறவர் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர் (பண்டைய தமிழகம்: 1999: 200).*

*என்று குறிப்பிடுகின்றார்*

*இதைப்போன்றே மற்றொரு வாதமும் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. பெருங்கற்காலத்தில் உருப்பெற்ற மருதநிலப் பண்பாட்டில் முன்னிலையில் இருந்தவர்கள் வேளிர்கள் என்ற கருத்தை வரலாற்றாய்வாளர் சம்பகலட்சுமி முன்வைக்கின்றார். இக்காலத்தில் கிடைக்கும் கருப்பு - சிவப்பு பானையோடு 'வேளிர்'களுக்கானது என்பது இவரது வாதம். வேளிர்கள் பெருங்கற்காலத் தமிழகத்தில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்தினர் என்ற கருத்தை முன்வைத்து பின்வரும் ஆதாரங்களை அவர் கொடுக்கின்றார்:*

> *தென் கேரளம், கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் வேளிர் வாழ்ந்ததால்தான் இப்பகுதி அன்று வேள்நாடு என்று அழைக்கப்பட்டது. சோழ நாட்டுக்குச் சோறு கொடுத்த காவிரி*

*ஆற்றுப்படுகையிலும் பல வேளிர் குடிகள் காணப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வடஆர்க்காடு மாவட்டத்திலும் வேளிர் குடிகள் காணப்பட்டன. சங்க இலக்கியங்களில் வேளிர் பற்றி அடிக்கடி வரும் குறிப்புகளும் அவர்களது செழிப்பான வாழ்வு, வளம் பற்றிய தகவல்களும் புலவர்களுக்கு இவர்கள் அளித்த கொடைகள் பற்றிய தகவல்களும் தமிழகத்தில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்திய வர்கள் இவர்களே என்பதை எடுத்துக்காட்டுகின்றன. (சம்பகலட்சுமி: 1975: 76)*

சங்க இலக்கியங்களில் வேளிர் பற்றி அடிக்கடி வரும் குறிப்புகளும் அவர்களது செழிப்பான வாழ்வு, வளம் பற்றிய தகவல்களும் புலவர்களுக்கு இவர்கள் அளித்த கொடைகள் பற்றிய தகவல்களும் தமிழகத்தில் விவசாயப் புரட்சியை ஏற்படுத்திய வர்கள் இவர்களே என்பதை எடுத்துக்காட்டுகின்றன

பெருங்கற்காலச் சமூகத்தில் தலைமையாய் இருந்தவர்கள் வேளிர்கள் என்ற கருத்தைக் கட்டமைக்க சங்கஇலக்கியப் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன. புறநானூற்றில் இடம்பெறும் ‘நெல்லரியும் இருந் தொழுவர்’(புறம். 24), ‘நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே’ (புறம். 186), ‘உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறம். 18)’ ஆகிய குறிப்புகள் நீர்ப்பாசன விவசாயத்தைப் பேசுகின்றனவாக உள்ளன. புறநானூற்றுப் பாடல்களின் இந்த அடிகளைப் பெருங்கற்காலச் சமூகத்தின் தொடர்ச்சியைச் சொல்லும் அடிகளாக மதிப்பீடு செய்கின்றனர். எனினும் இது நீண்ட விவாதத்திற்குட்பட்டது.

## குறியீடுகள்

பெருங்கற்கால மட்பொருட்களில் பல குறியீடுகள் (Graffiti Marks) காணப்படுகின்றன. இவை, ஒருதலைச் சூலம், இருதலைச் சூலம், விண்மீன், ஏணி, உடுக்கை, அம்பு முனை, சுவஸ்திக் குறியீடு, எக்ஸ் வடிவம், வில், அம்பு, படகு, தராசு முதலானக் குறியீடுகளும், பொருள்கொள்ள முடியாத ஒழுங்கற்ற கீறல் குறியீடுகளும் பெருங்கற்கால மட்பொருட்களில் இடம்பெறுகின்றன.

குறியீடுகள் பானையைச் சுட்டபின் போடப்பட்டனவா, சுடும்முன் போடப்பட்டனவா என்ற வாதங்கள் ஒரு புறம் இருக்க, அவை ஏன் போடப்பட்டன? என்ற வாதமே மேலோங்கி நிற்கின்றது. இக்குறியீடுகள் குறித்து பின்வரும் கருத்துக்கள் நிலவுகின்றன:

சுடுவோனால் அடையாளத்திற்காகப் போடப்பட்டன.

சில குலங்களுக்கான குறியீடுகள்.

பானை உரிமையாளர்களால் போடப்பட்டது.

சுடுவோனால் போடப்பட்ட குறியீடு எனில் எப்படி ஒரே மாதிரியாக அது தமிழகம் முழுவதும் பரலாக இருந்தது? என்ற வாதத்தின்மூலம் இது நிராகரிக்கப்பட்டது. இதுபோன்றே பானை உரிமையாளர்கள் போட்டது எனில், எல்லா ஊர்களிலும் எப்படி ஒரே மாதிரியான குறிகளை உரிமையாளர்கள் பயன்படுத்தி இருப்பார்கள்? என்ற கேள்வி அக்கருத்தை வலுவிழக்கச் செய்து விடுகின்றது. இதுபோன்றே குலக் குறியீடுகள் என்று மதிப்பீடு

செய்தாலும் ஒரே பானையில் பல குறியீடுகள் மாறி மாறிக் கிடைப்பதால் அக்கருத்தும் ஐயத்திற்கிடமானதாகவே உள்ளது.

ஆய்வாளர் கா. ராஜன் இவற்றைக் குலக்குறியீடாக 1998ஆம் ஆண்டில் (குறியீடுகளும் எழுத்துக்களும், வரலாற்றுக் கலம்பகம்) மதிப்பீடு செய்தார். பின்னாளில், (2004) இக்கருத்தை அவரே மாற்றிக் கொள்கின்றார். 'இக்குறியீடுகள் சிந்து சமவெளிப் பண்பாட்டு எழுத்துகளின் மறைவிற்கும் பிராமி எழுத்துகளின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட ஒருவகை வரிவடிவமே.' (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்: 2004: 44) என்கின்றார்.

> வல்லம் அகழாய்வில் அகழ்ந்த குழிகளில் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் கீழ் அடுக்குகளிலும், தமிழ்ப் பிராமி எழுத்துகள் பொறித்தவை மேல் அடுக்குகளிலும் கிடைத்தன. தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள் கிடைக்கத் தொடங்கியவுடன் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது என்பது இவ்வகழாய்வில் காணப்படும் ஒரு சிறப்பம்சமாகும். (Subbarayalu, 1985) இந்நிகழ்வு தமிழ்ப் பிராமி எழுத்துக் குறியீடினின்று வளர்ச்சியுற்றதா அல்லது செய்திப் பரிமாற்றத்திற்குக் குறியீட்டினைவிடச் சிறந்த கருவியாகத் தமிழ்ப் பிராமி வரிவடிவம் உருவானதால் இவை வழக்கில் இருந்து மங்கி விட்டனவா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது. (கா. ராஜன், பக். 48, 2004)

தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த பானை ஓடுகள் கிடைக்கத் தொடங்கியவுடன் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது

பெருங்கற்காலப் பானை ஓடுகளில் கிடைக்கப் பெற்ற குறியீடு களையும், பாறை ஓவியங்களில் இடம்பெறும் குறியீடுகளையும் வகைப்படுத்திப் புதிய ஆய்வுகளும் தொடர்கின்றன. இதற்குச் சான்றாக இராசு. பவுன் துரையின் 'பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்' என்ற நூலைக் குறிப்பிடலாம்.

பெருங்கற்கால பானையோட்டுக் குறியீடுகளை டி.வி. மகாலிங்கம் இரண்டாகப் பாகுபாடு செய்கின்றார். அவை:

1. சமய நம்பிக்கைச் சார்ந்த குறியீடுகள்.
2. குழுக் குறிகள்.

சூரியன், சந்திரன், திரிசூலம், சுவஸ்திகா முதலியவற்றைச் சமய நம்பிக்கை சார்ந்த குறியீடுகளாகவும்; மரங்கள், மிருகங்கள், வளைந்த கோடுகள், வட்டங்கள், ஒழுங்கற்றக் கோடுகள் முதலியவற்றைக் குழுக்குறிகள் என்றும் (1970, Presidential Address. All India Numismatics Conference. 59th Annual Session, Nagpur.) அவர் கூறுகின்றார்.

பெருங்கற்காலப் பானைகளில் உள்ள கீறல்கள் குறித்துத் தெளிவான முடிவுகள் இதுவரை எட்டப்படவில்லை. குறியீடுகளைத் தொடர்ந்து பானை ஓடுகளில் பிராமி எழுத்துகள் எழுதப்பட்டு

வந்துள்ளன என்பது மட்டுமே இதுவரை அறியப்பட்ட உண்மையாக உள்ளது.

பொருந்தல் கிராமத்தில் கிடைத்த நான்கு கால் சாடியில் எழுதப்பட்ட பிராமி எழுத்தின் காலம் கி.மு. 500 என அமெரிக்காவைச் சேர்ந்த 'பீட்டா அனலெட்டிக் லேப்' சமீபத்தில் கூறியுள்ளது. இக்காலக் கணிப்பிற்கு இச்சாடியில் வைக்கப்பட்ட நெல் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் பிராமி எழுத்துக்கள் வடக்கில் இருந்து தமிழகம் வந்தன என்ற கூற்றுக்கள் பொய்யாகிவிட்டன. அசோகன் காலத்திற்கு முன்பிருந்தே பிராமி எழுத்துக்களை தமிழ்ச் சமூகம் பயன்படுத்தியுள்ளது என்று உறுதியாகக் கூறலாம். (சமூக விஞ்ஞானம், ஜூலைஆகஸ்ட், 2011.)

## பெருங்கற்காலத் தொழில்கள்

பொருந்தல் கிராமத்தில் கிடைத்த நான்கு கால் சாடியில் எழுதப்பட்ட பிராமி எழுத்தின் காலம் கி.மு. **500** என அமெரிக்காவைச் சேர்ந்த 'பீட்டா அனலெட்டிக் லேப்' சமீபத்தில் கூறியுள்ளது.

பெருங்கற்காலத்தில் கைவினைஞர்கள் சிறப்பான கலைப் பொருட்களை உருவாக்கியுள்ளனர். பெருங்கற்காலத்தில் நடைபெற்ற பாசன வசதி முறையிலான விவசாயம் செழிப்பான விளைச்சலைக் கொடுத்து கைவினைஞர்களைச் சுதந்திரமானவர்களாக வாழ வகை செய்திருக்க வேண்டும். இதற்கு அவர்களால் வடிக்கப்பட்ட உலோக ஆபரணங்கள், கற்களால் வடிக்கப்பட்ட மணிகள் சான்றுகளாக உள்ளன. பெருங்கற்காலச் சமூகம் வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நிலையில் வேளாண் உற்பத்தியில் ஈடுபடாத கைவினை ஞர்கள் நுண்கலைத் திறனில் தேர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்றே கருதத் தோன்றுகின்றது. கொடுமணல் அகழாய்வில் கண்டெடுக்கப் பட்ட நேர்த்தியான மணிகளே இதற்குச் சான்றாக அமைகின்றன.

இரும்பின் பயன்பாடு அறிந்த இம்மக்கள் அதன்மூலம் செய்யப்பட்ட கத்தி, அம்பு முதலானவற்றை வேட்டை, போர்த் தொழில்களுக்குப் பயன்படுத்தினர். கொழு, கத்தி, வேல்களை வடித்துக் கொடுத்த கொல்லர் சமூகம் இக்காலகட்டத்தில் தொழில் பிரிவில் முக்கிய இடத்தில் இருந்திருக்க வேண்டும். இதுபற்றியெல்லாம் மேலும் விரிவாகப் பேசக் கூடிய தரவுகள் இல்லை.

இதுபோன்றே குயவர் சமூகத்தினரால் செய்யப்பட்ட வகை வகையான பானைகளும் முக்கியமானவை. உணவு புழக்கத்திற்குப் பயன்படுத்திய மட்பாண்டப் பொருட்களையும், இறப்புச் சடங்கில் வைத்துப் புதைப்பதற்கான மட்பாண்டப் பொருட்களையும் குயவர் சமூகத்தினரே உருவாக்கியிருக்க வேண்டும்.

வாய் அகன்ற பானைகள், சிறிய பானைகள், மூடிகள், தாங்கிகள், தட்டுகள், வாய் குறுகிய பானைகள், குவளைகள், கிண்ணங்கள் முதலான பொருட்களை அழகுபடுத்த நிறங்களைத் தயாரித்து அதனை

மேற் பூச்சு செய்யும் அழகியல் கலையையும் குயவர்கள் அறிந்திருந்தனர். பானைகளின் வாய்களிலும், வளைவுகளிலும் அவர்களின் நுண் அழகியல் வேலைப்பாடுகள் வெளிப்படுகின்றன. மிக உறுதியான மெல்லிய பானை ஓடுகளை உருவாக்கும் அளவுக்கு அவர்களின் தொழில்நுட்பம் அன்று வளர்ச்சியடைந்ததாகவே இருந்தது.

கற்களை ஒழுங்குபடுத்தி அவற்றைப் பலகைக் கற்களாக மாற்றும் தொழில்நுட்பத்தை அறிந்திருந்த தச்சர் சமூகம், கூட்டு மனித உழைப்பின்வழி தன்னைத் தக்கவைத்திருந்தது. பெருங்கற்காலக் கற்கள் சுமார் 3 முதல் 5 டன் வரை எடையுள்ளவை. இதனைக் கூட்டு உழைப்பின் மூலமே வெட்டியெடுப்பது முதல், அவற்றைக் கொண்டு வந்து பதுக்கை அமைப்பது வரையிலான செயல்பாடுகளைச் செய்திருக்க முடியும். இச்செயல்பாட்டிற்குக் கடினமான மனித உழைப்புத் தேவை என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

பெருங்கற்காலக் கற்கள் சுமார் **3** முதல் **5** டன் வரை எடையுள்ளவை. இதனைக் கூட்டு உழைப்பின் மூலமே வெட்டியெடுப்பது முதல், அவற்றைக் கொண்டு வந்து பதுக்கை அமைப்பது வரையிலான செயல்பாடுகளைச் செய்திருக்க முடியும்

பண்டமாற்று முறையிலான வாணிபத்தை இக்காலகட்ட மக்கள் மேற்கொண்டிருந்தார்கள் என்று கருதுவதற்கு வாய்ப்புள்ளது. இதுபோன்றே குழுத்தலைமைகள் தங்களுக்கான பாதுகாப்பு வீரர்களை உருவாக்கிக்கொண்டு விளைச்சல், ஊர்ப் பகுதிகளை எல்லைப் பிரித்து ஒழுங்குபடுத்திக்கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும்.

அகழாய்வில் கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு பெருங்கற்காலச் சமூகத்தின் தொழில் நிலைகளை மேற்கண்டவாறு மதிப்பீடு செய்யலாம்.

## நம்பிக்கைகளும் சடங்குகளும்

இறந்தோரை வழிபடும் பண்பாட்டை இக்கால மக்கள் கொண்டிருந்தனர். உடல் அழிந்தாலும் உயிர் அழிவதில்லை என்ற கருத்தின் விளைவாகவே, இறந்தவர்களுடன் அவர்கள் பயன்படுத்தியப் பொருட்களை வைத்துப் புதைக்கும் பழக்கத்தை இம்மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

சில பெருங்கற்காலக் கல்லறைகளில் உள்ள கற்பலகைகளில் துளைகள் காணப்படுகின்றன. இப்படி துளை இடுவது அக்கால மக்களின் ஒரு வகையான நம்பிக்கையின் வெளிப்பாடாகும். இதைப்பற்றி, தி. சுப்பிரமணியன் குறிப்பிடுகையில்,

> கிழக்குப் பக்கமுள்ள கற்பலகைகளில் இடுதுளை பல வடிவங்களில் காணப்படுகின்றன. வட்டம், 'ப' வடிவம், முக்கோணம், அம்பு முனை போன்ற வடிவங்களில் இடுதுளைகள் அமைக்கப்பட்டுள்ளன. கற்களைக் குடைந்து, இடுதுளை அமைக்கும் முறையும் இக்காலத்தில்தான் முதன் முதலில் கிடைத்துள்ளது. (தி. சுப்பிரமணியன்: 2010: 110).

இதைப்போன்றே சவப்பெட்டிகள் போன்று செய்யப்பட்ட ஈமப் பேழைகள் ஏன் விலங்கு உருவங்களில் செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியும் உள்ளது. 8, 14, 18 கால்கள் எனப் பேழையின் அளவைப் பொறுத்து கால்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றன. விலங்கு உருவப் பேழைகள் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடையாளமாக செய்யப்பட்டன என்றே கருத வேண்டியுள்ளது. ஏன் அம்மக்கள் விலங்கு உருவங்களைத் தெரிவு செய்து, அதில் சவத்தை வைத்து அடக்கம் செய்தனர் என்ற கேள்விக்கு யூகமாகக்கூட விடைக் கூறுவது கடினமாக உள்ளது.

பேழைகளில் இறந்தவர்களுடன் வைத்துப் புதைக்கும் பொருட்களின் எண்ணிக்கை 18 முதல் 32 வரையுள்ளது. ஒவ்வொரு பொருளும் சிறிய, பெரிய பானைகளிலும், தட்டுகள், கிண்ணங்களிலும் வைத்துப் புதைக்கப்படுகின்றன. உயிருக்கு உணவு கொடுக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடாக இதனைப் பார்க்கலாம். சில பகுதி மக்கள் இறந்த மனிதனின் ஒரு சில எலும்புத் துண்டுகளை மட்டும் பானையில் எடுத்து வைத்துப் புதைக்கும் மரபைக் கொண்டிருந்ததையும் அறிய முடிகின்றது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த தடயங்கள்வழி அந்தப் பகுதியில் இம்மரபு மிகுதியாக இருந்துள்ளதை அறியலாம்.

ஈமப் பேழைகள் சிலவற்றில் சுடுமண்ணால் செய்யப்பட்ட பெண் உருவ பொம்மைகள் கிடைக்கின்றன. இது அன்றையச் சமூகத்தில் நிலவிய தாய்த்தெய்வ வழிபாட்டை உணர்த்துவதாகவே உள்ளது. தாய்த் தெய்வ வழிபாடு வளமையுடன் தொடர்புடையதாகும்

பெருங்கற்கால ஈமப் பேழைகள் சிலவற்றில் சுடுமண்ணால் செய்யப்பட்ட பெண் உருவ பொம்மைகள் கிடைக்கின்றன. இது அன்றையச் சமூகத்தில் நிலவிய தாய்த்தெய்வ வழிபாட்டை உணர்த்துவதாகவே உள்ளது. தாய்த் தெய்வ வழிபாடு வளமையுடன் தொடர்புடையதாகும். பிள்ளைப்பேறு முதலான தேவைகளின் ஊடாக உருப்பெற்று வளர்ந்த இவ்வழிபாட்டு மரபு மாந்தர் குல விருத்தியை முதன்மையாகக் கொண்டது. இதன் காரணமாகவே தாய்த்தெய்வ வழிபாடு பெருங்கற்காலத்தில் சிறப்புற்றிருக்க வேண்டும்.

## முடிவாக

கி.மு. 1000 ஆவது ஆண்டில் தென்னகத்தில் நிலவிய பெருங்கற் காலப் பண்பாடு குறித்து விவாதித்திருக்கின்ற வேளையில், வடபுலத்தில் உள்ள அரசியல் போக்குகள் முக்கியமானவை. தமிழர் நாகரிகத்தின் தோற்றுவாயாகப் பெருங்கற்காலத்தைக் கட்டமைக்கும் அதே காலகட்டத்தில், வடக்கே கி.மு. 3500 ஆண்டுகள் பழைமையான சிந்து வெளிப் பண்பாடு முடிவுக்கு வந்து, வேதப் பண்பாடு (ரிக் வேதம் கி.மு. 1200-1000) செழுமையுற்று வளர்ந்து வந்துள்ளது. ஆரியக் குடியேற்றத்திற்குப் பின் இந்தியாவில் வாழ்ந்த பல பூர்வகுடிகள் இடம்பெயரும் நிலையும் ஏற்பட்டது. காலப்போக்கில் மனுதர்மம், அர்த்தசாஸ்திரம் முதலான நூல்களின்வழிச் சமூகம், வழி நடத்தப்பட்டது. இக்கருத்தியலினூடாக மௌரியர்களும் அடுத்து வந்த குஷாண வம்சத்தினரும் இந்தியாவை ஆட்சி செய்தனர்.

*ஆனால், இக்காலகட்டத்தில் தென்னகத்தின் வரலாற்றைக் குறித்து யூகமாகவே பேச வேண்டியுள்ளது என்பது வருத்தமான செய்தி. கற்கால மனிதர்கள் வாழ்ந்த வாழ்விடங்களைக் கொண்டுள்ள தமிழக நிலப்பரப்பில் இங்கு வாழ்ந்த தொன்மையான மக்களைப் பற்றிய வரலாறு விவாதமாகவே அமைகின்றது. பெருங்கற்கால மக்கள் எந்தக் குடிவழி மரபினர், எந்த அரசாட்சிக்கு உட்பட்டவர்கள் என்பன போன்ற தீர்க்கப்படாத கேள்விகளே நமக்கு முன் உள்ளன, என்ற போதிலும் வடபுலத்திற்கு இணையான, வைதீகக் கலப்பற்ற, ஒரு தொல் நாகரீகத்தைத் தென்னகம் கொண்டு விளங்கியது என்பதே உண்மையாக உள்ளது.*

**துணை நூற்பட்டியல்**

*கார், ஈ. எச்., 2005, வரலாறு என்றால் என்ன?, அலைகள் வெளியீட்டகம், சென்னை.*

*சிற்றம்பலம் சி. க., 1999, பண்டைய தமிழகம், சென்னை, குமரன் பதிப்பகம்.*

*சமூக விஞ்ஞானம் (ஆய்விதழ்), செப்டம்பர்-டிசம்பர், 2008.*

*சமூக விஞ்ஞானம் (ஆய்விதழ்), ஏப்ரல்-ஜூன், 2010.*

*சமூக விஞ்ஞானம் (ஆய்விதழ்), ஜூலை-ஆகஸ்ட்-செப், 2011 ப. 7,8.*

*பவுன்துரை, இராசு., 2002, பண்டையத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.*

*மௌனகுரு, 2005, பண்டையத் தமிழர் வரலாறும் இலக்கியமும், அலைகள் வெளியீட்டகம், சென்னை.*

*ராஜன், கா., 1998, "குறியீடுகளும் எழுத்துக்களும், வரலாற்றுக் கலம்பகம் (பேரா. செ. இராசு அவர்களின் மணிவிழா ஆய்வுக்கோவை), தஞ்சாவூர் ப. 1-16.*

*ராஜன், கா., 2004, தொல்லியல் நோக்கில் சங்ககாலம், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*

Champakalakshmi, R., 1975-76, Archaeology and Tamil Traditions, Puratattva No. 8. PP.110-112.

Gurumurthy, S., 1999, Deciphering The Indus Script..., Chennai, University of Madras.

----- 1981, Ceramic Traditions in South India, Chennai, University of Madras.

Magalingam, T.V., 1970, Presidential Address. All India Numismatics Conference. 59th Annual Session, Nagpur.

**முனைவர் சி. இளங்கோ**

விருந்துநிலை விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்லைக்கழகம்

சென்னை.